குடும்பநல நீதிமன்றம், பெரம்பலூர்.
<u>முன்னிலை :</u> திரு.அ.தனசேகரன், எம்.ஏ., எம்.பி.ஏ., எம்.எல்.,
நீதிபதி, குடும்பநல நீதிமன்றம் பெரம்பலூர்.
<u>2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை</u>

<u>இந்தியன் விவாகரத்து அசல் மனு எண்.41/2021ல்</u>
<u>இடைநிலை மனு எண்.05/2023</u>
<u>(TNPB07-000108-2021)</u>

அருண்குமார் த/பெ.பிரான்சிஸ், அன்னமங்கலம் கிராமம், வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம்

.... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

தாட்சர் ஜெனிபர் ஜாய்ஸ் த/பெ.ஜான் சுந்தரராஜ், அண்ணா நகர் முதல் தெரு, காட்டூர் (தெற்கு), அரியமங்கலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

.... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/கணவர் தரப்பு வழக்கை மறுதிறப்பு செய்து மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் சமரசம் பேசிய ஆலய பங்குத் தந்தை U.S.ஆரோக்கியசாமி அவர்களை அழைத்து மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 05.01.2023 |
| மனுவில் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் | : | 20/- |

மனுதாரரால் 05.01.2023ல் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு இந்நீதிமன்றத்தால் கடந்த 07.01.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.வள்ளுவன்நம்பி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அரங்கசாமி அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரையில் விசாரணையில் இருந்து வந்து 30.01.2023-ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பு வாதுரையை கேட்டும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-12.pdf
www.ecourtsindia.com

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com



**<u>கட்டளையாணை</u>**

1. மனுதாரர்/கணவர் செலவுத்தொகையாக ரூ.500/-ஐ பெரம்பலூர் மாவட்ட சமரச தீர்வு மையத்தில் வருகின்ற 13.02.2023 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**<u>செலவுத்தொகைப்பட்டியல்</u>**

(இருதரப்பிலும் செலவுத் தொகைப் பட்டியல் தாக்கல் இல்லை)

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

(ஒம்/- அ.தனசேகரன்)
நீதிபதி,
குடும்பநல நீதிமன்றம்,
பெரம்பலூர்.



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-12.pdf